இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 304 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 01 – திங்கள்கிழமை 15 ஜூன் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 304 : Thiruvalluvar Year - 2057 - Aani 01 - Monday 15 June 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13–06–2026), சென்னை – அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்ற கழக மகளிரணி – மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். இதில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நேரம் தரலாம்; ஆனால்

# பொதுமக்கள் பாதுகாப்பு பற்றி பேசாமல் இருக்க முடியுமா?

## கழக மகளிரணி – மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கூட்டத்தில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, ஜூன் 15 -**

**“தீர்ந்துபோன சக்தியிடமே திருடுகிறவர், எவ்வளவு காய்ந்து போன சக்தியாக இருப்பார்?” என்றும் - “பா.ஜ.க.வின் ஜெராக்ஸ் மாதிரி முதலமைச்சர் செயல்படுகிறார். ஆதரவு கொடுத்த கட்சிகள் தர்மசங்கடத்தில் தவிக்கிறார்கள்” என்றும் - “வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நேரம் தரலாம்; பொதுமக்களுடைய பாதுகாப்பு பற்றி எப்படிப் பேசாமல் இருக்க முடியும்?” என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.6.2026), கழக மகளிரணி - மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்வில் கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

மகளிர் அணியின் சார்பில், இந்த எழுச்சி மிகுந்த கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி செயலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



### கழகம் பெற்ற வாக்குகள்: மகளிரணியின் உழைப்பும் காரணம்!

தேர்தலுக்கு முன்னர், ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ மண்டல மாநாடுகள், வீடு வீடாகச் சென்று பிரச்சாரம், சமூக வலைதளங்களின் வழியான செயல்பாடுகள் என மகளிர் அணியைச் சேர்ந்த நீங்கள் அனைவரும் பல்வேறு பணிகளைச் செய்யும் அணியாக மிக எழுச்சியோடு செய்து முடித்தீர்கள். கழகம் பெற்றிருக்கும் வாக்குகளுக்கு உங்களுடைய முயற்சிகளும் முக்கியக் காரணமாக அமைந்தது என்பதை, யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது. அதற்காக முதலில் என்னுடைய மனப்பூர்வமான நன்றியை உங்கள் அத்தனை பேருக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிற நாம், மீண்டும் ஆளும் கட்சியாக மாற வேண்டும் என்றால், இன்னும் சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் செயல்பட வேண்டும். அதற்கான களமாகத்தான் இந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

### தேர்தலில் மக்கள் இந்த ஆட்சியை அகற்றுவார்கள்!

**“ஆறு மாதம் கூட விமர்சனம் செய்யாமல் இருக்கிற மாதிரி இந்த ஆட்சி நடக்குமா?” என்று, ஏற்கனவே நான் கலந்து கொண்ட சில நிகழ்ச்சிகளில் பேசினேன். உடனே, அதை உண்மைக்கு மாறாகத் திரித்து, “ஆட்சியைக் கவிழ்க்க சதியா?” என்று கேட்டு நமது எதிரிகள் அழ ஆரம்பித்துவிட்டார்கள். நான் ஏற்கனவே நிறைய முறை சொல்லி விட்டேன். இன்னொரு முறையும் இந்தக் கூட்டத்தில் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். தி.மு.கழகம் பொறுப்பான, விழிப்பான எதிர்க்கட்சியாகத் தன்னுடைய கடமையை உறுதியாகச் செய்யும். இந்த ஆட்சியின் தோல்விகளை நாம் தொடர்ந்து சுட்டிக் காட்டுவோம்; கேள்விகளைக் கேட்போம். அடுத்து எப்போது தேர்தல் நடந்தாலும் மக்களே இந்த ஆட்சியை அகற்றுவார்கள்.**

கடந்த ஐந்து ஆண்டுகாலம் நடைபெற்ற நம்முடைய திராவிட மாடல் ஆட்சியே மகளிருக்கான ஆட்சிதான் என்பதைப் பற்றி, இங்கே எனக்கு முன்பு தலைமையேற்றுப் பேசிய தங்கை கனிமொழி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்து முதல் கையெழுத்தான விடியல் பயணத்தில் தொடங்கி, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் என்று ஏராளமான புதுமையான திட்டங்களை நாம்தான் உருவாக்கினோம். அது மக்களுக்குச் சரியாகச் சென்றடைகிறதா என்று பார்த்துப் பார்த்துச் செய்து கொடுத்தோம். அதுமட்டுமல்ல, இப்போது நடந்து முடிந்த தேர்தலில் கூட பெண்களுக்குத்தான் நிறைய வாக்குறுதிகள் நாம் கொடுத்தோம். குறிப்பாக, 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் கொடுக்கிற ‘இல்லத்தரசி’ திட்டம், அதுமட்டுமா, உரிமைத்தொகை உயர்வு என்று நிறைய இருக்கின்றன.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## மெட்ரோ ரயில் – ‘எய்ம்ஸ்’ மருத்துவமனை:

# மதுரையை புறக்கணித்த முதல்வர்!

## தொழில்துறையினர் அதிருப்தி!

மதுரை, ஜூன் 15 -

பிரதமர் மோடியை சந்தித்த விஜய், மதுரையின் வளர்ச்சிக்கான நீண்ட கால திட்டங்கள் குறித்து வாய் திறக்காதது மதுரை மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

டெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்திற்கு பின்னர் பிரதமர் மோடியை சந்தித்து தமிழ்நாட்டின் கோரிக்கைகள் என்ற பெயரில் 4 பக்கம் அடங்கிய மனுவை முதலமைச்சர் விஜய் வழங்கினார். அதில் தென் தமிழ்நாட்டில் முதுகெலும்பாக திகழும் மதுரை குறித்து அவர் ஒரு வார்த்தை கூட குறிப்பிடவில்லை என ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு கூறியுள்ளது.

மதுரையில் பல ஆண்டுகளாக கட்டி முடிக்கப்படாமல் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை, மதுரை நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 8,500 கோடி ரூபாய் மதிப்பிலான மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி, மதுரை விமான நிலையத்தை முழுமையான பன்னாட்டு முனையமாக மாற்றுதல் மற்றும் ஓடுபாதையை விரிவாக்கம் செய்தல், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கும் மதுரை தூத்துக்குடி வழித்தடத்தில் புதிய வாகன உற்பத்தி தொழில் பூங்காவை அமைத்தல் உள்ளிட்ட மதுரையின் வளர்ச்சிக்கான நீண்ட காலக் கோரிக்கைகள் குறித்து முதலமைச்சர் விஜய், பிரதமர் மோடியிடம் வலியுறுத்தவில்லை.

இது மதுரை மக்கள் மற்றும் தொழில் துறையினரிடையே ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இத்தனைக்கும் மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்றத் தொகுதிகளில் 8 தொகுதிகளில் த.வெ.க.வை மக்கள் வெற்றி பெற வைத்துள்ளனர். ஆனால் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், முதலமைச்சர் விஜய் மதுரையை புறக்கணித்தது, அப்பகுதி மக்கள் மற்றும் தொழில் துறையினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளதாக ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு விமர்சித்துள்ளது.

